17 NOV 2020

03197

**சுருக்கம்**

சிவகாசி நகராட்சி – நூறாண்டுகள் நிறைவு – சிவகாசி நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை தேர்வு செய்ய குழு அமைத்தல் மற்றும் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்குதல் (in principle approval) ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [ந.நி–V(1)] துறை**

**அரசாணை (நிலை) எண். 123** நாள் 11.11.2020

சார்வரி வருடம், ஐப்பசி மாதம் 26,

திருவள்ளுவராண்டு 2051.

**படிக்கப்பட்டது:–**

1. விருதுநகரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை குறித்த செய்தி வெளியீடு எண்.171, நாள்:01.03.2020.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண். ந.க.எண்.5713 / 2020 / இ3, நாள்:11.03.2020.

*******

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.03.2020 விருதுநகரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரையில் சிவகாசி நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி சிவகாசி நகராட்சிக்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக்காக ரூ.50.00 கோடி சிறப்பு நிதி வழங்கப்படும் என அறிவித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சிவகாசி நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், 01.03.2020 அன்று நடைபெற்ற மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில் சுமார் 3 லட்சத்திற்கு மேலான மக்கள் தொகை கொண்ட சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில், அந்த நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, சாலைப்பணிகள், அலங்கார விளக்கு அமைத்தல், ஆம்னி பேருந்துநிலையம் அமைக்கும் பணி நகராட்சி பேருந்து நிலையம் மேம்பாட்டு பணிகள், திருமண மஹால் கட்டும் பணி, நடைபாதை மற்றும் சாலையோர பூங்கா அமைத்தல், நகரில் 100–வது ஆண்டு நினைவு தூண் அமைத்தல், பூங்காக்கள் அமைக்கும் பணி, திருத்தங்கல் சாலையில்

Scanned by CamScanner

இரு சக்கர வாகனம் காப்பகம் அமைத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.50 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் பணிகளை தேர்வு செய்து செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநர், நகராட்சி ஆணையர், சிவகாசி ஆகியோர் கொண்ட குழு அமைக்கவும் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** நகராட்சி நிர்வாக ஆணையரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து முதற்கண் சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு செய்ததைபொட்டி, பல உட்கட்டமைப்புகளை ஏற்படுத்திட சிறப்பு நிதி ரூ.50.00 கோடி வழங்குவதற்கு கொள்கை அளவில் அனுமதியும் (in principle approval) மேற்படி பணிகளை தேர்வு செய்து செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மற்றும் நகராட்சி ஆணையர், சிவகாசி ஆகியோர் கொண்ட குழு அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளிக்கலாம் என்றும் முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

**4.** மேலும் ரூ.50.00 கோடி செலவில் சிவகாசி நகராட்சியில் அடிப்படை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்க தேவையான உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் பணிக்கப்படுகிறார்.

**// ஆளுநரின் ஆணைப்படி //**

**ஹர்மந்தர் சிங்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28.

**நகல்:–**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி

நகராட்சி ஆணையர், சிவகாசி.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–600 009.

இருப்புக் கோப்பு / உபரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

11/11/2020

**பிரிவு அலுவலர்.**

11/11/2020

Scanned by CamScanner